இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வியாழக்கிழமை 13-06-2024

# 71 இல் 20 வாரிசுகள்

**நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் மோடியும் அமித்ஷாவும் எதிர்க் கட்சிகள் மீது வைத்த விமர்சனமே, 'வாரிசு அரசியல் செய்கிறார்கள்' என்பது தான். ஆனால், 'மைனாரிட்டி' பா.ஜ.க. ஆட்சி அமைச்சரவையில் 'மெஜாரிட்டி' என்று சொல்லும் அளவுக்கு வாரிசுகள் நிரம்பி வழிகிறார்கள். இவர்களுக்கு எல்லாம் எதற்காக அமைச்சரவையில் இடம் கொடுத்தார்கள்?**

1. பியூஸ் கோயல் - இவரது தந்தை வேதபிரகாஷ் கோயல், பிரதமர் வாஜ்பாய் அமைச்சரவையில் அமைச்சராக இருந்தார். பியூஸ் கோயலின் அம்மா சந்திரகாந்த் கோயல், நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தார். இவர்களது வாரிசுதான் அமைச்சர் ஆகி இருக்கிறார்.

2. தர்மேந்திர பிரதான் - இவரது தந்தை தேவேந்திர பிரதான், பிரதமர் வாஜ்பாய் அமைச்சரவையில் அமைச்சராக இருந்தார்.

3. ராம் மோகன் - இவரது தந்தை எர்ரான் நாயுடு, மத்திய அமைச்சராக இருந்தவர். பிரதமர் தேவகவுடா அமைச்சரவையிலும், பிரதமர் குஜ்ரால் அமைச்சரவையிலும் கிராமப்புற அமைச்சராக இருந்தார். 13 ஆண்டுகள் எம்.பி.யாக இருந்தார் எர்ரான் நாயுடு.

4. ஜோதி ராதித்ய சிந்தியா - இவரது தந்தை மாதவராவ் சிந்தியா, ஒன்றிய அமைச்சராக இருந்தவர்.

5. ஜிதின் பிரசாத் - இவரது தந்தை ஜிதேந்திர பிரசாத், உத்தரப் பிரதேச எம்.பி.யாக இருந்தார்.

6. அனுப்பிரியா பட்டேல் - இவரது தந்தை சோன் லால் படேல், அப்னா தள் கட்சியின் தலைவர் ஆவார். இவரது அம்மா கிருஷ்ணா படேலும் தேர்தலில் போட்டியிட்டவர் தான்.

7. கிர்த்தி வரதன் சிங் - இவரது தந்தை ராஜா ஆனந்த் சிங் உத்தரப்பிரதேச மாநிலத்தில் அமைச்சராக இருந்தார்.

8. வீரேந்திரகுமார் - இவர் மத்தியப்பிரதேச முன்னாள் அமைச்சர் கௌரிசங்கருக்கு உறவினர்.

9. சாந்தனு தாகூர் - மேற்கு வங்க முன்னாள் அமைச்சர் கிருஷ்ணதாகூரின் மகன்.

10. சிரக் பாஸ்வான் - இவரது தந்தை ராம் விலாஸ் பாஸ்வான் பல தடவை ஒன்றிய அமைச்சராக இருந்தார். தந்தை மறைவுக்குப் பிறகு அவரது வாரிசாக சிரக் பாஸ்வான் அரசியலுக்குள் நுழைந்தார். வெற்றி பெற்றார். அமைச்சர் ஆக்கப்பட்டுள்ளார்.

11. ராம்நாத் தாகூர் - இவரது தந்தை கர்பூரி தாகூர், பீகார் மாநில முதலமைச்சராக இருந்தார்.

12. ஜெயந்த் சௌத்ரி - இவரது தந்தைதான் முன்னாள் பிரதமர் சௌத்ரி சரண் சிங்.

13. ரக்ஷா கட்ஸே - மகாராஷ்டிரா முன்னாள் அமைச்சர் ஏக்நாத் கட்ஸேவின் உறவினர்.

14. கிரன் ரிஜிஜ் - இவரது தந்தை ரிஜிதன் கரு, அருணாசலப் பிரதேச மாநில சபாநாயகராக இருந்தவர்.

15. ராவ் இந்திரஜித் சிங் - இவரது தந்தை மகாராஜா ராவ் பைரேந்திர சிங் அரியானா மாநிலத்தில் முதலமைச்சராக இருந்தார்.

16. ரவ்நீத் சிங் பிட்டு - இவரது தாத்தா பஞ்சாப் மாநிலத்தில் முதலமைச்சராக இருந்தார்.

17. அன்னபூரணா தேவி - இவரது கணவர் ராம் பிரசாத் பீகார் மாநில முன்னாள் எம்.எல்.ஏ.

18. ஹெச். டி.குமாரசாமி - இவரது தந்தை ஹெச். டி.தேவ கவுடா. இவருக்கு அறிமுகம் தேவையில்லை. இந்திய நாட்டின் பிரதமராக இருந்தவர் தேவகவுடா. அவரது மகனான குமாரசாமி, கர்நாடக முதலமைச்சராக இருந்தவர். அவர்களது குடும்பம் மொத்தமும் அரசியலில்தான் இருக்கிறது. பாலியல் வழக்குகளில் சிக்கி சிறையில் இருக்கிறார்கள் தேவகவுடாவின் மகனும், பேரனும். இவர்களுக்கு இருகரம் கூப்பி வாக்குக் கேட்டவர்தான் மோடி. பாலியல் குற்றங்களில் சிக்கியதும் அவர்களை வெளிப்படையாகக் கண்டிக்கக் கூட மனமில்லாமல் இருந்தவர்கள்தான் பா.ஜ.க. தலைவர்கள்.

19. கமலேஸ் பாஸ்வான் - ஓம் பிரகாஷ் பாஸ்வானின் மகன். உத்தரப்பிரதேச பா.ஜ.க. பிரமுகர்களில் ஒருவர் இவர்.

20. இவை அனைத்துக்கும் மேலாக பா.ஜ.க. தலைவராகவும் இருந்து ஒன்றிய அமைச்சர் ஆகி இருக்கிறாரே ஜே.பி.நட்டா, இவர் மத்திய பிரதேச மாநில முன்னாள் அமைச்சர் ஜெய்ஸ்ரீ பானர்ஜியின் உறவினர்.

ஆக மொத்தம் 20 வாரிசு அமைச்சர்களுக்கு தனது அமைச்சரவையில் இடம் கொடுத்துள்ளார் பிரதமர் மோடி. இவர்தான் தேர்தலில் வாய்கிழிய வாரிசு அரசியலுக்கு எதிராகக் கர்ஜித்தவர்.

இதில் 10 பேர் கேபினெட் அமைச்சர்கள். 2 பேர் தனிப்பொறுப்பு அமைச்சர்கள். 8 பேர் இணையமைச்சர்கள். வாரிசுகளுக்கும் கோட்டா அடிப்படையில் மூன்றிலும் இடம் கொடுத்துள்ளார் மோடி.

**அரசியல் அனைவருக்கும் பொதுவானது. இந்த அரசியல் களத்தில் அனைவரும் பங்கேற்று தனக்கான அரசியலை உருவாக்கிக் கொள்ள வேண்டும் என்பதும், அனைவரும் அனைத்து மக்களுக்காகவும் தொண்டாற்ற வேண்டும் என்பதுதான் அரசியல் நெறியாகும். இன்னார் வரலாம், இன்னார் வரக்கூடாது என்ற 'வர்ணம்' அரசியலுக்கு இல்லை.**

ராகுல் காந்தியைப் பற்றி என்ன குறை சொல்வது என்று தெரியாமல் மோடி சொன்ன குற்றச்சாட்டு அது. தமிழ்நாட்டில் தி.மு.க. அரசைப் பற்றிக் குறை சொல்வதற்கு ஏதும் கிடைக்காததால் இங்கு வந்தும் அதே வாரிசு குற்றச்சாட்டை மோடி வைத்துப் போனார்.

**கழகத் தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், 'இது கேட்டுக் கேட்டுப் புளித்துப் போன குற்றச்சாட்டு. வேறு ஏதாவது புதிதாக இருந்தால் சொல்லுங்கள்' என்று கிண்டல் அடித்திருந்தார். அதே புளித்துப் போன மாவில் ஏன் வடை சுட வேண்டும்?**



சட்டப்பேரவைத் தலைவர் மு. அப்பாவு மற்றும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று (12.6.2024) தலைமைச் செயலகத்தில், விளவங்கோடு சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் வெற்றி பெற்ற திருமதி தாரகை கத்பெர்ட் சட்டமன்ற உறுப்பினராக உறுதிமொழி எடுத்துக் கொண்டார். உடன் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், சட்டமன்றப் பேரவை துணைத் தலைவர் கு. பிச்சாண்டி, அரசு தலைமைக் கொறடா முனைவர் கோவி. செழியன், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவரும், சட்டமன்ற உறுப்பினருமான கு. செல்வப்பெருந்தகை, நாடாளுமன்ற உறுப்பினர் விஜய் வசந்த், காங்கிரஸ் கட்சியின் சட்டமன்றக் கட்சித் தலைவர் எஸ். ராஜேஷ் குமார், தமிழ்நாடு சிறுபான்மையினர் நல ஆணையத்தின் தலைவர் பீட்டர் அல்போன்ஸ், சட்டமன்றப் பேரவைச் செயலாளர் கி. சீனிவாசன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளனர்.

### இலக்கியத் துறையில் சிறப்பாகத் தொண்டாற்றி வரும்

# ஃபாஸ்டினா சூசைராஜ் (எ) பாமாவுக்கு ஔவையார் விருது!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, ஜூன் 13-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.6.2024) தலைமைச் செயலகத்தில், இலக்கியத்தின் மூலமாக தலித் மக்களின் குரலாக ஒலித்து, சமூக தொண்டாற்றி வரும் ஃபாஸ்டினா சூசைராஜ் (எ) பாமாவுக்கு 2024ஆம் ஆண்டிற்கான ஔவையார் விருதினை வழங்கிச் சிறப்பித்தார்கள்.

கல்வி, மருத்துவம், மகளிர் முன்னேற்றம், மகளிர் உரிமை, மத நல்லிணக்கத்தை ஊக்குவித்தல், தமிழுக்கான சேவை, கலை, இலக்கியம், அறிவியல், பத்திரிகை மற்றும் நிருவாகம் ஆகிய பல்வேறு துறைகளில் முன்மாதிரியாக தொண்டாற்றிய பெண்களை ஊக்குவிக்கும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் சர்வதேச மகளிர் தினத்தன்று சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை சார்பில் தமிழ்நாடு அரசால் "ஔவையார் விருது" வழங்கப்பட்டு வருகிறது. இவ்விருது பெறுவோருக்கு 1 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய்க்கான காசோலை மற்றும் சான்றிதழ் வழங்கப்படும்.

அவ்வகையில், தமிழ்நாடு அரசின் 2024ஆம் ஆண்டிற்கான ஔவையார் விருதிற்கு இலக்கியத்தின் மூலமாக தலித் மக்களின் குரலாக ஒலித்து, சமூக தொண்டாற்றி வரும். முன்னணி எழுத்தாளரான விருதுநகர் மாவட்டத்தைச் சேர்ந்த ஃபாஸ்டினா சூசைராஜ் (எ) பாமா தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

பெண்களின் வாழ்க்கையை, குறிப்பாக ஒடுக்கப்பட்ட பெண்களின் வாழ்க்கையை தனது வாழ்வனுபவங்களின் மூலம், சாதி மற்றும் பாலினம் சார்ந்து சமூகத்தில் நிலவும் சமத்துவமின்மையையும் அநீதிகளையும் எடுத்துக்காட்டும் பல்வேறு நூல்களை ஃபாஸ்டினா சூசைராஜ் (எ) பாமா எழுதியுள்ளார். இவற்றில் கருக்கு, சங்கதி, வன்மம், மனுசி போன்ற நாவல்களும், குசும்புக்காரன், கொண்டாட்டம், ஒரு தாத்தாவும் எருமையும் போன்ற சிறுகதை தொகுப்புகளும் குறிப்பிடத்தக்கவை.

இவர் எழுதிய "கருக்கு" என்ற புதினம் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டு, 2000ஆம் ஆண்டின் 'கிராஸ் வேர்ட்புக்' விருதை பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. மேலும், அவர் எழுதிய "கருக்கு" என்ற புதினம் தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய மொழிகளிலும், "வன்மம்" என்ற புதினம் ஆங்கிலம், தெலுங்கு மற்றும் கன்னட மொழிகளிலும், "சங்கதி" என்ற புதினம் பிரஞ்சு, ஆங்கிலம், மலையாளம், தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளிலும், "குசும்புக்காரன்", "ஒரு தாத்தாவும் எருமையும்" போன்ற சிறுகதை தொகுப்புகளிலிருந்து சில கதைகள் ஆங்கிலம், ஹிந்தி, உருது, கன்னடம், குஜராத்தி ஆகிய மொழிகளிலும், மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

ஃபாஸ்டினா சூசைராஜ் (எ) பாமாவின் இலக்கியப் பணியினை பாராட்டி, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் 2024ஆம் ஆண்டிற்கான ஔவையார் விருதினை அவருக்கு வழங்கிச் சிறப்பித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி கீதாஜீவன், தூத்துக்குடி பாராளுமன்ற உறுப்பினர் திருமதி கனிமொழி கருணாநிதி, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை செயலாளர் திருமதி ஜெயஸ்ரீ முரளிதரன், சமூக நல ஆணையர் திருமதி வே.அமுதவல்லி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### காலை - மாலை என இரு அமர்வில்

# சட்டப் பேரவை கூட்டத்தொடர் ஜூன் 20 முதல் 29 வரை நடைபெறுகிறது!

### அலுவல் ஆய்வுக் குழுவில் முடிவு!

சென்னை, ஜூன் 13 -

தமிழ்நாடு சட்டமன்ற கூட்டத்தொடர் வருகிற 20 ஆம் தேதி முதல் 29 ஆம் தேதி வரை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

காலை, மாலை என இரு அமர்வுகள் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சட்டமன்ற கூட்டத்தொடர் வருகிற 20 ஆம் தேதி தொடங்கும் என்று அறிவிக்கப்பட்டு இருந்த நிலையில், அலுவல் ஆய்வுக்குழு கூட்டம் சபாநாயகர் அப்பாவு தலைமையில் நேற்று நடைபெற்றது.

கூட்டத்தில் சட்டமன்ற கூட்டத்தொடரை வருகிற 29 ஆம் தேதி வரை நடத்துவது என்று முடிவு செய்யப்பட்டது.

அலுவல் ஆய்வுக்குழு கூட்டத்திற்கு பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய சபாநாயகர் அப்பாவு, சட்டமன்ற கூட்டத்தொடர் 20 ஆம் தேதி காலை 10 மணிக்கு தொடங்கும் என்று தெரிவித்தார்.

21 ஆம் தேதி முதல் 29 ஆம் தேதி வரை சட்டப் பேரவை காலை 9.30 மணிக்கு தொடங்கும் என்றும் அவர் கூறினார்.

காலை, மாலை என இரு அமர்வுகளாக சட்டமன்ற கூட்டத்தொடர் நடைபெறும் என்று சபாநாயகர் அப்பாவு தெரிவித்தார்.

### கூட்டுறவு நிறுவனங்கள் மூலம்

# கல்விக்கடன் ரூ 1 லட்சத்திலிருந்து ரூ 5 லட்சமாக உயர்வு!

### கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் அறிவிப்பு !

*சென்னை, ஜூன் 13 -*

*முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் வழங்கப்பட்டு வந்த கல்விக்கடன் ரூ.1 லட்சத்திலிருந்து ரூ.5 லட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது என கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் அறிவித்துள்ளார்.*

*இதுகுறித்து கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது :-*



*இளைஞர்கள் வாழ்வில் முன்னேற்றம் அடைவதற்கு, கல்வி மிகவும் அவசியமாகும். அவ்வாறு கல்லூரி கல்வி பயிலும் மாணவர்களுக்கு குடும்ப வருமானம் ஒரு தடையாக இருக்க கூடாது என கருதி, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவுபடி, கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் மாண வர்களின் புத்தக கட்டணம், தங்கும் விடுதி கட்டணம், உணவு கட்டணம், டியூஷன் கட்டணம் போன்று பல்வேறு கல்வி கட்டணங்களை செலுத்த ஏதுவாக ரூ. 1 லட்சமாக வழங்கப்பட்டு வந்த கல்விக்கடன் ரூ.5 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.*

*கல்விக்கடன் பெறும் மாணவர்கள் கல்வி பயிலும் காலம் முடிந்து 6 மாதங்கள் கழித்து வரும் 5 வருடங்களுக்குள் கடனை திருப்பி செலுத்த வேண்டும். இக்கல்விக் கடனுக்கான அதிகபட்ச வட்டி விகிதம் 10% ஆகும். அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் மூலம் அங்கீகரிக்கப்பட்ட பட்டயப் படிப்பு மற்றும் இளங்கலை பட்டப்படிப்பு மட்டுமின்றி, முதுகலைப் பட்டப் படிப்புக்கும், தொழில் முறை படிப்புகளுக்கும் (PROFESSIONAL COURSES) கூட்டுறவு நிறுவனங்கள் கல்விக் கடன் வழங்குகின்றன. முதலாம் ஆண்டு மாணவர்களுக்கு மட்டுமின்றி, இரண்டாம் ஆண்டு, மூன்றாம் ஆண்டு பயிலும் கல்லூரி மாணவர்களுக்கும் கல்விக் கடன் வழங்கப்படுகின்றது.*

*தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தால் (டாம்கோ) சிறுபான்மையின மாணவர்களுக்கு கூட்டுறவு வங்கிகள் மூலம் குறைந்த வட்டி விகிதத்தில் கல்விக் கடன் வழங்கப்படுகின்றது.*

*தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி, மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள், நகரக் கூட்டுறவு வங்கிகள், நகரக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள், நிறுவனங்களை மாணவர்கள் அணுகி, உரிய ஆவணங்கள் சமர்ப்பித்து, கல்விக் கடனை பெற்று மாணவர்கள் தங்களின் கல்விக் கனவை நனவாக்கிக் கொள்ள கேட்டுக்கொள்கிறேன்.*

*இவ்வாறு அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தெரிவித்துள்ளார்.*

### தொடர் விடுமுறை;

# ரயில்களில் முன்பதிவு தொடக்கம்!

சென்னை,ஜூன்.13-

தொடர் விடுமுறையையொட்டி ரயில்களின் முன்பதிவு தொடங்கியுள்ளதாக தெற்கு ரயில்வே தெரிவித்துள்ளது. இந்தாண்டு வரும் அக்டோபர் 11ம் தேதியும் (வெள்ளிக்கிழமை), விஜயதசமி அக்டோபர் 12ம் தேதியும் (சனிக்கிழமை) 13ம் தேதி ஞாயிற்றுக்கிழமை என்பதால் 3 நாட்கள் தொடர்ச்சியாக விடுமுறை உள்ளது.

இந்நிலையில் ரயிலில் பயணம் மேற்கொள்வோர் முன்கூட்டியே முன்பதிவு செய்ய தொடங்கி விடுவார்கள். ரயில்வேயில் 120 நாட்களுக்கு முன்பே டிக்கெட் முன்பதிவு செய்துகொள்ளும் வசதி இருக்கிறது. அதன்படி, அக்டோபர் 9ம் தேதிக்கு புறப்படுவோர் நேற்று முன்தினம் (11ம் தேதி) முன்பதிவு செய்து கொண்டனர்.